**ஜூன் – 1**

**"என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்." - யோவா 14 : 21.**

கிறிஸ்துவோடு நமக்கிருக்கிற இந்த நெருங்கிய அந்நியோன்னியமும் ஐக்கியமும் நம் ஒவ்வொருவருக்கும் அதிகதிகமாக அவருடைய சொந்த ஆவியைக் கொடுப்பதாக. அதினாலே "யேசுவோடு நாம் இருக்கிறோம்" என்று உலகம் அறிந்து கொள்ளும். நம் ஒவ்வொருவருடைய ஜெபமும் இவ்விதமாக இருப்பதாக.

கர்த்தராகிய யேசுவே, உம்மை எனக்கு ஒரு ஜீவனுள்ள பிரகாசமான நிச்சயப் பொருளாக ஆக்கும்! விசுவாசத்தின் கூர்மையான பார்வைக்குக் காணப்படுகிற எந் உலகப் பொருளையும் விட, அதிக உண்மையானதாக ஆக்கும். மிகவும் அதிக இன்பமான உலகப் பந்தத்தையும் விட, மிகவும் பிரியமுள்ளவராகவும்அதிக நெருக்கமாக பக்கத்திலிருக்கிறவராகவும் ஆக்கும்." **- Z '95, 75 (R 1789).**

நாம் கர்த்தரை நேசிக்கிறதுக்குரிய அத்தாட்சி அவருடைய கற்பனைகளை உடையவர்களாகவும், அவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களாகவும் இருப்பதே. நம்மிடமுள்ள இந்தக் குணத்தைப் பிதாவும், குமாரனும் உயர்வாக மதிக்கிறதினால், கர்த்தருக்காகவுள்ள இப்படிப்பட்ட அன்புக்காக அவர்களும் பதிலுக்கு அன்பு கூறுகிறார்கள். நம்முடைய இந்நிலை நம்பிக்கை, அன்பு இவைகளின் கூடுதலான வெளிப்படுத்துதலை நமக்குக் கொடுக்க அவர்களைத் தூண்டுகிறது. அவர்களுடைய குணத்தைப் புரிந்து கொள்ளுகிறதிலிருந்தும் உயர்வாக மதிக்கிறதிலிருந்தும் அவர்களோடு ஏற்படுகிற நம்முடைய இருதய ஐக்கியத்தின் சிலாக்கியம் பெற்றவர்களாயிருக்கிறதில் உச்ச நிலையை அடைகிறோம். **-P '33, 79.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

உபா 30:19,20; யோவா 14:15-17, 22-24; 1யோவா 2:5; 4:13; 5:3; நீதி 8:17;23:26; யோவா 15:10,14; 16:27; எபி 12:6; யோவா 8:31,32

**கோபுரவாசிப்பு : Z '14, 248 (R 5520)**

**வினாக்கள் :** இந்த வசனம் சம்பந்தமாக இவ்வார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? விளைவுகளை என்ன?